**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

செ.வெ.எண். 270 நாள்: 06.07.2026

**வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, பெருங்குடி மற்றும் சோழிங்கநல்லூர் மண்டலங்களில் ரூ. 27.58 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் கால்வாய் மேம்பாட்டுப் பணிகளை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி. எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் இன்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, பெருங்குடி மற்றும் சோழிங்கநல்லூர் மண்டலங்களில் ரூ.27.58 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் கால்வாய் மேம்பாட்டுப் பணிகளை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி. எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் இன்று (06.07.2026) பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மாநகராட்சி ஆணையாளர் அவர்கள், பெருங்குடி மண்டலம், வார்டு-188க்குட்பட்ட மயிலை பாலாஜி நகர் 4ஆவது பிளாக் பகுதி கால்வாயில் ரூ.8.68 கோடி மதிப்பீட்டில் 207 மீ. நீளம் மற்றும் 14.40 மீ. அகலத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் மேம்பாட்டுப் பணிகள், 1ஆவது பிளாக் கால்வாயில் ரூ.6.48 கோடி மதிப்பீட்டில் 235 மீ. நீளம் மற்றும் 13 மீ. அகலத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் மேம்பாட்டுப் பணிகள், சோழிங்கநல்லூர் மண்டலம், வார்டு-195க்குட்பட்ட தலைமைச் செயலக அலுவலர் குடியிருப்புப் பகுதியில் ரூ.12.42 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு வரும் சிறு பாலம் மற்றும் கால்வாய் மேம்பாட்டுப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது, ஆணையாளர் அவர்கள் நடைபெற்று வரும் பணிகளை பருவமழைக்கு முன்னதாக விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுகளின்போது, தெற்கு வட்டார துணை ஆணையாளர் திரு.அஃதாப் ரசூல், இ.ஆ.ப., மண்டல அலுவலர் திரு. சி.திருநாவுக்கரசு மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**